# யூலை – 01 – திங்கள்

## அருளாளர் ஜூனி பெரோ சேரோ

## “நீர் என்னைப் பின்பற்றி வாரும்” மத் 8:22

---

## முதல் வாசகம் : தொடக்க நூல் 18 : 16 – 33

அந்நாட்களில் அந்த மூன்று மனிதர்களும் எழுந்து, அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிச் சென்றார்கள். ஆபிரகாமும் உடன்சென்று அவர்களை வழியனுப்பினார். அப்பொழுது ஆண்டவர், ”நான் செய்யவிருப்பதை ஆபிரகாமிடமிருந்து மறைப்பேனா? ஆபிரகாமிடமிருந்தே வலிமை மிக்க மாபெரும் இனம் தோன்றும். அவன் மூலம் மண்ணுலகின் எல்லா இனத்தாரும் ஆசி பெற்றுக் கொள்வர். ஏனெனில், நீதி, நேர்மை வழி நின்று எனக்குக் கீழ்ப்படியும்படி தன் புதல்வருக்கும், தனக்குப்பின் தன் வழிமரபினருக்கும் கற்றுத்தருமாறு ஆண்டவராகிய நான் ஆபிரகாமுக்கு வாக்களித்ததை அவன் நிறைவேற்றுவான்” என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். ஆதலால் ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, ”சோதோம் கொமோராவுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல் எழும்பியுள்ளது. அவற்றின் பாவம் மிகவும் கொடியது. என்னை வந்தடைந்த கண்டனக்குரலின்படி அவர்கள் நடந்து கொண்டார்களா இல்லையா என்று அறிந்து கொள்ள நான் இறங்கிச் சென்று பார்ப்பேன்” என்றார். அப்பொழுது அந்த மனிதர்கள் அவ்விடத்தைவிட்டுச் சோதோமை நோக்கிச் சென்றார்கள். ஆபிரகாமோ ஆண்டவர் திருமுன் நின்று கொண்டிருந்தார். ஆபிரகாம் அவரை அணுகிக் கூறியதாவது ”தீயவரோடு நீதிமான்களையும் சேர்த்து அழித்து விடுவீரோ? ஒருவேளை நகரில் ஐம்பது நீதிமான்களாவது இருக்கலாம். அப்படியானால் அதிலிருக்கிற ஐம்பது நீதிமான்களை முன்னிட்டாவது அவ்விடத்தைக் காப்பாற்றாமல் அழிப்பீரோ? தீயவனோடு நீதிமானையும் அழிப்பது உமக்கு ஏற்றதன்று நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவது உமக்கு உகந்ததன்று. அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர் நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டாமோ?” என்றார். அதற்கு ஆண்டவர், ”நான் சோதோம் நகரில் ஐம்பது நீதிமான்கள் இருப்பதாகக் கண்டால், அவர்களின் பொருட்டு முழுவதையும் காப்பாற்றுவேன்” என்றார். அப்பொழுது ஆபிரகாம் மறுமொழியாக, ”தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேசத் துணிந்துவிட்டேன் ஒருவேளை அந்த ஐம்பது நீதிமான்களில் ஐந்து பேர் குறைவாயிருக்கலாம். ஐந்து பேர் குறைவதை முன்னிட்டு நகர் முழுவதையும் அழிப்பீரோ?” என்றார். அதற்கு அவர், ”நான் நாற்பத்தைந்து பேரை அங்கே கண்டால் அழிக்க மாட்டேன்” என்றார். மீண்டும் அவர், உரையாடலைத் தொடர்ந்து, ”ஒருவேளை அங்கே நாற்பது பேர் மட்டும் காணப்பட்டால் என்ன செய்வீர்?” என்று கேட்க, ஆண்டவர், ”நாற்பது நீதிமான்களின் பொருட்டு அதனை அழிக்க மாட்டேன்” என்றார், 30 அப்பொழுது ஆபிரகாம் ”என் தலைவரே, நான் இன்னும் பேச வேண்டும் சினமடைய வேண்டாம். ஒருவேளை அங்கே முப்பது பேரே காணப்பட்டால்? என, அவரும் ”முப்பது பேர் அங்குக் காணப்பட்டால் அழிக்க மாட்டேன்” என்று பதிலளித்தார். அவர், ”என் தலைவரே, உம்மோடு அடியேன் பேசத்துணிந்து விட்டேன். ஒருவேளை அங்கு இருபது பேரே காணப்பட்டால்?” என, அதற்கு அவர், ”இருபது பேரை முன்னிட்டு நான் அழிக்க மாட்டேன்” என்றார். அதற்கு அவர், ”என் தலைவரே, சினமடைய வேண்டாம் இன்னும் ஒரே ஒரு தடவை மட்டும் என்னைப் பேசவிடும். ஒரு வேளை அங்குப் பத்துப் பேர் மட்டும் காணப்பட்டால்?” என, அவர், ”அந்தப் பத்துப் பேரை முன்னிட்டு அழிக்கமாட்டேன்” என்றார். ஆபிரகாமோடு பேசி முடித்தபின் ஆண்டவர் அவரை விட்டுச்சென்றார். ஆபிரகாமும் தம் இடத்திற்குத் திரும்பிச் சென்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

## நற்செய்தி : மத்தேயு 8 : 18 - 22

அக்காலத்தில், இயேசு திரளான மக்கள் தம்மைச் சூழ்ந்திருப்பதைக் கண்டு, மறு கரைக்குச் செல்ல சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அப்பொழுது மறைநூல் அறிஞர் ஒருவர் வந்து, ”போதகரே, நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்” என்றார். இயேசு அவரிடம், ”நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” என்றார். இயேசுவின் சீடருள் மற்றொருவர் அவரை நோக்கி, ”ஐயா, முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்து விட்டு வர அனுமதியும்” என்றார். இயேசு அவரைப் பார்த்து, ”நீர் என்னைப் பின்பற்றி வாரும். இறந்தோரைப்பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்” என்றார்.

**தியானம்:** இன்று கனடாவின் பிறந்த நாள். பலவிதமான இன்னல்களை அனுபவித்த எம்மை இங்கே அழைத்து வந்து எமக்கு நல்ல வாழ்வை தந்த இறைவனுக்கு நன்றி சொல்வோம். எம்மை வாழ வைத்துக்கொண்டிருக்கும் இந்த நாட்டிற்கு நன்றி சொல்வோம். இறைவன் தொடர்ந்தும் இந்த கனடா தேசத்தை ஆசீர்வதித்து பாதுகாத்திட வேண்டுவோம். இன்றைய முதல் வாசகத்தில் ஒரு நகரின் அழிவைப்பற்றிய முன் எச்சரிக்கையை இறைவன் கொடுப்பதை நாம் காணலாம். அந்த நகருக்காக ஆபிரகாம் பரிந்து பேசுகின்றார். 50 நீதிமான்களில் தொடங்கி 10 நீதிமான்களில் வந்து நிற்கின்றார். ஆனால் அங்கே 10 நீதிமான்களைக் கூட காணமுடியாமல் போனது. லோத்தின் குடும்பம் மட்டும் காப்பாற்றப் பட்டது, ஆனால் அவரின் மனைவி திரும்பிப் பார்த்ததால் உப்புத்தூணாக மாறினார். சொதோம் நகரில் கடவுளுக்கு விருப்பம் இல்லாத சம்பவங்கள் இடம் பெற்றன. அதனால் கடவுள் அதனை அழிக்க சித்தம் கொண்டார். இன்றைய உலகிலும் இறைவனுக்கு பிரியமில்லாத பல சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணம் உள்ளன. இவற்றில் இருந்து நாம் பாதுகாக்கப் பட வேண்டும். எமது சமுதாயமும் பாதுகாக்கப் பட வேண்டும். அண்மையில் அமெரிக்காவில் அலபாமா மாகாணத்தில் கருக் கலைப்பு சட்ட விரோதமானது. இதற்கு ஆதரவை விட எதிர்ப்புக்குரல்கள்தான் அதிகமாக வந்தது. சமுதாயம் தீமைக்கு அடிபணிகின்றதோ என்ற எண்ணம் எழுகின்றது. இன்றைய நற்செய்தியில் தம்மை பின்பற்றி வரும்படி யேசு அழைக்கின்றார். பின்பற்ற விரும்புகின்ற வரை தமக்கு தலை சாய்க்க இடம் இல்லை என்று மறுக்கின்ற யேசு வேறு சிலரை அழைத்த போது அவர்கள் காரணம் கூறி தப்புவதை பார்க்கலாம். இன்று நாமும் எமக்கு வரும் அழைப்புக்களை பல காரணங்களைக் கூறி மறுத்து விடுகின்றோம். ஆனால் கிறிஸ்த்தவர்களாகிய நாம் யேசு காட்டிய பாதையில் நடக்க அழைக்கப் பட்டிருக்கின்றோம். கடவுளின் அழைப்புக்கு செவிமடுத்து வாழ்வதே கிறிஸ்த்தவ வாழ்வு என்பதனை உணர்ந்து வாழ்வோம்.